பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

இப்னு பாஸ் ﷺ வாழ்க்கைக் குறிப்பு 21

தொடக்கம் 25

1 நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதின் சிறப்புகள் 27

1. இப்பணியின் தேவை கூடிவிட்டது 28

2. நன்மை, தீமைகளின் அடிப்படைகள் 29

3. அல்லாஹ் ஏன் தூதர்களை அனுப்பினான்? 29

4. அல்லாஹ்வின் அருளைப் பெற்ற மக்கள் யார்? 32

5. நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுப்பவர்களே வெற்றியாளர்கள் 35

2 நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதின் படித்தரங்கள் 39

1. முதல் படித்தரம்: வலிமையோடு கையினால் தடுத்தல் 39

2. இரண்டாம் படித்தரம்: நாவினால் நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் 40

3. மூன்றாம் படித்தரம்: உள்ளத்தால் வெறுத்தல் 47

3 ஏன் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை? 48

1. நன்மையை ஏவி தீமையைத் தடுப்பது குறித்து மார்க்கத்தின் தீர்ப்பு 51

2. பொறுமையையும் நன்மையை எதிர்பார்ப்பதும் 52

4 அல்லாஹ்வின் மார்க்கத்தில் நுண்ணறிவைப் பெறுதல் 55

1

நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதின் சிறப்புகள்

❀

முஸ்லிம்களே!

அல்லாஹ் நமக்குக் கடமையாக்கியுள்ள பணிகளில் மிக மகத்தான பணி, நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணி. நம் சமுதாயத்தின் எழுச்சியும் வெற்றியும் இந்தப் பணியைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் இருக்கிறது.

இதைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து அலட்சியம் செய்து வந்தால் மிகப் பெரிய ஆபத்தும் குழப்பமும் உண்டாகிவிடும். நன்மையான விசயங்கள் மறைந்துவிடும். தீமைகள் அதிகரித்துவிடும்.

அல்லாஹ் தனது வேதத்தில் இந்தப் பணியின் சிறப்பை நமக்கு விளக்கியிருக்கிறான். மார்க்கத்தில் இதன் கண்ணியத்திற்கும் மேன்மைக்கும் தனி இடத்தைக் குறிப்பிடுகிறான். எந்தளவுக்கு என்றால் ஈமான்தான் இஸ்லாமின் அடிப்படை அம்சமாக இருந்தும் கூட நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது பற்றிய சில வசனங்களை ஈமான் தொடர்பான வசனங்களைவிடவும் முற்படுத்திச் சொல்கிறான். அல்லாஹ் கூறுகின்றான்:

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُونَ بِاللهِ

மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சமுதாயங்களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள் நீங்கள்தாம். நீங்கள் நன்மையான செயல்களை ஏவி, பாவமான செயல்களை விட்டுத் தடுக்கிறீர்கள். உண்மையாகவே அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களாகவும் இருக்கிறீர்கள்... (குர்ஆன் 3:110)

அல்லாஹ் இவ்வசனத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும் பணியை ஈமானைவிட முற்படுத்திச் சொல்லியிருக்கிறான். இப்படிச்

2

நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதின் படித்தரங்கள்

❀

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் பொன்மொழி ஒன்று இப்பணியின் முக்கியத்துவத்தைக் கூறுவதுடன், இதை மேற்கொள்வதின் ஒழுங்குமுறையையும் தெளிவுபடுத்துகிறது.

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறியதாக அபூ ஸயீது அல்குத்ரீ ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

مَنْ رَأَى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وَذَلِكَ أَضْعَفُ الإِيمَانِ

உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதைத் தமது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தமது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும். (முஸ்லிம் 49)

அல்லாஹ்வின் தூதர் ﷺ நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் இப்பணியினை மூன்று படித்தரங்களாகப் பிரித்துள்ளார்கள்.

1. முதல் படித்தரம்: வலிமையோடு கையினால் தடுத்தல்

உதாரணமாக, மதுவையும் போதைப் பொருட்களையும் தடுப்பது, இசைக்கருவிகளை நொறுக்கி கேளிக்கைகளை ஒழிப்பது, மக்களுக்குத் தீங்கு செய்பவர்களைத் தடுப்பது, தங்கள் சுயஇலாபங்களுக்காக மக்களுக்கு அநியாயம் செய்பவர்களைத் தடுப்பது, இன்னும் இது போன்ற பல தீய காரியங்களை விட்டு மக்களைத் தடுப்பது யாவும் இதில் அடங்கும். மேலும், மக்களைத் தொழும்படி வலியுறுத்துவது, அல்லாஹ் கடமையாக்கிய காரியங்களைச்

3

ஏன் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை?

❀

அல்லாஹ் கூறுவதாக அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

مُرُوا بِالْمَعْرُوفِ وَانْهَوْا عَنِ الْمُنْكَرِ مِنْ قَبْلِ أَنْ تَدْعُونِي فَلاَ أُجِيبُكُمْ وَتَسْأَلُونِي فَلاَ أُعْطِيكُمْ وَتَسْتَنْصِرُونِي فَلاَ أَنْصُرُكُمْ

நீங்கள் நன்மையை ஏவி, தீமையைத் தடுத்துக் கொண்டேயிருங்கள். நீங்கள் என்னை அழைப்பதற்கு முன் நான் உங்களுக்குப் பதிலளிக்கமாட்டேன். நீங்கள் என்னிடம் கேட்பதற்கு முன் நான் உங்களுக்குக் கொடுக்கமாட்டேன். நீங்கள் என்னிடம் உதவி தேடுவதற்கு முன் நான் உங்களுக்கு உதவி செய்யமாட்டேன். (அறிவிப்பு: ஆயிஷா ﷺ, ஸஹீஹு இப்னு ஹிப்பான் 290, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 2325)

ஹுதைஃபா ﷺ அவர்கள் மூலம் அறிவிக்கப்படும் மற்றொரு நபிமொழியில் வருவதாவது:

وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَتَأْمُرُنَّ بِالْمَعْرُوفِ وَلَتَنْهَوُنَّ عَنِ الْمُنْكَرِ أَوْ لَيُوشِكَنَّ اللهُ أَنْ يَبْعَثَ عَلَيْكُمْ عِقَابًا مِنْ عِنْدِهِ ثُمَّ لَتَدْعُنَّهُ فَلاَ يَسْتَجِيبُ لَكُمْ

எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக! அவசியம் நீங்கள் நன்மையை ஏவி, தீமையைத் தடுத்துக் கொண்டேயிருங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால் அல்லாஹ் உங்கள் மீது தனது தண்டனையை இறக்கிவிடுவான். பிறகு, நீங்கள் அவனை அழைத்தாலும் அவன் உங்களுக்கு பதிலளிக்கமாட்டான். (முஸ்னது அஹ்மது 23301, ஸஹீஹுல் ஜாமிஉ 7070)

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ அவர்கள் மூலம் அறிவிக்கப்படும் மற்றொரு நபிமொழி கூறுகிறது:

4

அல்லாஹ்வின் மார்க்கத்தில் நுண்ணறிவைப் பெறுதல்

❀

என் முஸ்லிம் சகோதரரே!

அல்லாஹ்வின் மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். அதில் நுட்பமான அறிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான் தீமைகளை உங்களால் இனங்கண்டுகொள்ள முடியும். நன்மைகளையும் அறிந்துகொள்ள முடியும். மார்க்கத்தைக் கற்று, அதில் விளக்கத்தையும் பெற்ற பிறகு, நன்மைகளை ஏவுங்கள்; தீமைகளைத் தடுங்கள். இதுதான் மகிழ்ச்சிக்கான அடையாளங்களாகும். அல்லாஹ் தன் அடியாருக்கு நன்மையை நாடுகிறான் என்பதற்கு ஆதாரங்களாகும். அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

مَنْ يُرِدِ اللَّهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

எவருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவரை மார்க்கத்தில் விளக்கம் பெற்றவராக ஆக்கிவிடுகின்றான். (அறிவிப்பு: முஆவியா ؓ, புகாரீ 71)

ஒரு மனிதரைக் காண்கிறீர்கள். அவர் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொடுக்கும் இடங்களுக்குச் செல்கிறார். அக்கல்வியைக் கற்று, அதில் விளக்கம் பெற்று தெளிவை அடைகிறார் என்றால், அவருக்கு அல்லாஹ் நன்மையை நாடியிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்களும் அம்மனிதருடன் சேர்ந்து அக்கல்விச் சபைகளில் கலந்துகொள்ளுங்கள்; அதில் சோர்வடையாமல் முயற்சி செய்யுங்கள்; மார்க்கத்தில் தெளிவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَمَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا سَهَّلَ اللَّهُ لَهُ بِهِ طَرِيقًا إِلَى الْجَنَّةِ